www.padippakam.com

# தோழர் தாஸிற்குத் தண்டனை வழங்க நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தானா? சொல்லுங்கள்

அராஜகவாதி சிறி சபாரத்தினத்தின் தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கத்தில் இதுவரை நடந்த காட்டுமிராண்டித்தனமான கறை படிந்த நிகழ்ச்சிகளில் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்றவற்றில் எம்மால் நிரூபிக்கப்படக்கூடியவற்றை மட்டும் மக்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

தனிநபரை அழிப்பதன்மூலம் பொது விடுதலையை அடைய முடியாது. ஆலாலசுந்தரம், தருமலிங்கம் போன்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலை.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் கொள்ளை. இந்தக் கொள்ளையை மறைக்க இதை நேரில் கண்ட ஏழாலை வாசியான சின்னவன் என்பவர் அடித்துக் கொலை.

உலகப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரக் கோவில் கொள்ளை. மேலும் கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்த புலவர் என்பவர் அடித்துத் துன்புறுத்தப் பட்டார். இக்கொள்ளை ஸ்ரீலங்கா ராணுவம் என்ற போர்வையில் நடத்தப்பட்டது.

சுழிபுரம் துரையப்பா கடையும், வீடும் கொள்ளை. யாழ்ப்பாணத்தில் ஒரேஇரவில் லலிதா நகைமாளிகை, அம்பலவாணர் நகைமாளிகை, மகாலட்சுமி நகைமாளிகை என்ற மூன்று நகைமாளிகைகள் கொள்ளை.

காரைநகரில் இரண்டு வீடுகள் கொள்ளை. ஒரு வீட்டுக்காரரைத் தாக்கிக் கிணற்றுக்குள் போடப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. எனினும் கிணற்றுள் தள்ளப்பட்டவர் உயிர்தப்பியுள்ளார்.

கோண்டாவில் இலங்கைப் போக்குவரத்து சபை பொறியியலாளர் வீட்டில் கொள்ளையிட முற்பட்டபோது அவர் விழித்துக்கொண்டதால் அங்கிருந்து தப்பி ஓட்டம்.

சாவகச்சேரி சின்னத்தம்பி அன். கோ. உரிமையாளர் வீட்டில் கொள்ளை அடித்ததுடன் அங்கிருந்த பெண்ணுடன் தகாதமுறையில் நடந்தனர்.

பிரவுன் ரோட்டில் உள்ள இலங்கை மின்சார சபைக் காரியாலயத்தில் இருந்த 1 1/2 லட்சம் ரூபா பெறுமதியான ரான்ஸ்போமர் கொள்ளை. ரான்ஸ்போமரில் இருந்த உலோகப்பொருட்களை பெருமாள் கோவிலில் உள்ள நாடார் ஒருவருக்கு 15,000 ரூபாவிற்கு விற்கப்பட்டது.

கல்வியங்காடு உதவி நீதவான் அமிர்தலிங்கம் வீட்டில் கொள்ளையடித்ததோடு, அவர் கொலை செய்யப்பட்டார்.

சிறுப்பிட்டி பப்பன் கடையில் கன்டோஸ், இனிப்புவகை, ரேடியோ, பெருந்தொகையான பணம் கொள்ளை.

சிறுப்பிட்டியில் டெலோவால் ஒரு பொதுமகன் தாக்கப்பட்டதை அடுத்து, இதை எதிர்த்த சிறுப்பிட்டி மக்கள் நடத்திய ஊர்வலத்தின்மீது வாகனத்தால் மோதியும், இரும்புக்கம்பிகள், தடிகள் போன்றவற்றால் தாக்கியுமுள்ளனர்.

மேலே குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் எமக்குள்ளேயே முரண்பாடு ஏற்பட்ட காலத்தில் நடைபெற்றது. இச்சம்பவங்களில் ஈடுபட்ட தோழர்கள் பலர் பலாத்காரமாகவே ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் பின் உண்மையை உணர்ந்து தெரிவித்த தகவல்களையும், பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று விசாரித்தபோது எடுத்த தகவல்களையும் கொண்டே இவற்றை நாம் பிரசுரிக்கிறோம். இதன்மூலம் இவர்கள் மக்களுக்கு என்ன சேவை செய்கிறார்கள் என்பது நாம் சொல்லாமலே புரியும்.

தாஸின் கொள்கைகளை ஏற்கும் போராளிகள்